# பாகிஸ்தான் பிரச்னை உள்நாட்டு விவகாரம்

17 SEP 1971

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் ...
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 218

... புரட்டாதி 1 நகப் 26 வெள்ளிக்கிழமை (17 9-71)

## ஹிந்துஸ்தான் செய்திக்கு பாதுகாப்பமைச்சு மறுப்பு

கொழும்பு, வியாழன் வல நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டதும், விளக்கி கொள்ளப்பட்டதுமான சர்வதேச வாழ்வு முறைக்கு ஏற்ற கொள்கைகளையும், நோக்குகளையும் அடிப்படையாகக் கொண்டதே இலங்கை அரசின் கொள்கையாகும் என்று பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு பத்திரிகைக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்திய வெளிநாட்டமைச்சர் சர்தார் சுவரன் சிங்கிற்கும் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை பற்றி 'ஹிந்துஸ்தான்' பத்திரிகை எழுதுகையில், "பாகிஸ்தான் விவகாரங்களில் தலையிடாத கொள்கை ஒன்றை இலங்கை கடைப்பிடித்துவருவது போலி என்பதைவெளிச்சமாக்க இந்திய வெளிவிவகார மந்திரியின் விஜயம் உதவியுள்ளது" என்று தெரிவித்துள்ளதற்கு மறுப்புத் தெரிவிக்கும்வகையில் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு இவ்வறிக்கையை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

(5ம் பக்கம் பார்க்க)

# கள்ளக் கடத்தலைத் தடுக்க வடபகுதியில் ஒரு நிறுவனம்

## உதவி பாதுகாப்பு அமைச்சர் ஜெயக்கொடி தகவல்

யாழ்ப்பாணம், வெள்ளி கள்ளக் கடத்தல், சட்ட விரோதக் குடியேற்றம் போன்றவற்றை விசாரிப்பதற்கு வடபகுதியில் மத்திய புலன் விசாரணை நிலையம் ஒன்று நிறுவப்படுமென்று உதவிப் பாதுகாப்பு அமைச்சர் திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி தெரிவித்தார்.

பகுதியிலுள்ள ராணுவ முகாமுக்கு விஜயம் செய்த உதவி அமைச்சர் திரு. ஜெயக்கொடி இந்தத் தகவலை வெளியிட்டார்.

வடபகுதிக் கரையோரப் பகுதிகளில் ஹெலிகோப்டர்கள், மோட்டார் படகுகள் ரோந்து புரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்றும் அவர் தெரிவித்தார்.

கள்ளக் கடத்தல், சட்ட விரோதக் குடியேற்றம் சம்பந்தமாக பொலிஸ், ராணுவம், சுங்க இலாகா எடுக்கும் தடுப்பு நடவடிக்கை பற்றி மத்திய புலன் விசாரணை நிலையம் விசாரிக்குமென்றும் உதவி பாதுகாப்பு அமைச்சர் சொன்னார்.

வடபகுதிக் கரையோரங்களில் வானொலித் தொடர்புகள் இணைக்கப்படும் என்றும் உதவி பாதுகாப்பு அமைச்சர் கூறினார்.

## "கம்யூனிஸ்ட் கட்சி அரசிலிருந்து வெளியேறாது"

### நாடு திரும்பியதும் பீட்டர் தகவல்

கொழும்பு, வியாழன் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கத்தைவிட்டு வெளியேறாது. இக்கட்சி அரசாங்கத்தைவிட்டு வெளியேறுமென்று தவறான கருத்தைப் பலர் பரப்பிவருகின்றனர். இதுபற்றி ஓரிருநாட்களில் பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை விடுவேன்

இவ்வாறு சோவியத் யூனியனுக்குச் சென்றிருந்த வீடமைப்பு நிர்மாண அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் இன்று நாடு திரும்பியதும் தெரிவித்தார்

இன்று காலை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கியதும் அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் இதனை வெளியிட்டார்

திரு பீட்டர் கெனமனும் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களும் சில நாட்களுக்கு முன் சோவியத் யூனியனுக்குச் சென்றதை வைத்து அரசாங்கத்திலிருந்து வெளியேறுவது பற்றி ஆராய்வதற்கே அங்கு சென்றுள்ளார் என்று பலர் பேஷ்யம் கூறியது குறிப்பிடத்தக்கது

## பருத்தித்துறை கொலை வழக்கு: தொகுப்புரை ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி பருத்தித்துறை கொலை வழக்கில் நேற்று முதலாவது எதிரி சார்பில் ஆஜரான அட்வகேட் ஆர், ஈ தம்பிரத்தினம், தொகுப்புரை நிகழ்த்தினார், சுமார் 4 மணித்தியாலம் அவர் தொகுப்புரை நிகழ்த்தினார்,

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதிபதி சர் ஓ எல். டி. கிரெண்டர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவருகிறது.

இவ்வழக்கில் பருத்தித்துறையில் 1968-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதலாம் திகதிக்கும் 68-ம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்றும் திகதிக்குமிடையில் முகமது கசிதான் முஹதீன் என்பவரை சபாரத்தினம் ராமச்சந்திரன் செல்லத்துரை, நடராசா ஆகிய இருவரும் ஒன்றுசேர்ந்து ஒரே நோக்குடன் சூழ்ச்சிசெய்ததாகவும், அந்தச்சூழ்ச்சியினுல் அவர் கொலைசெய்யப்பட்டதாகவும் 68-ம் ஆண்டு நவம்பர் 2-ம் திகதி ராமச்சந்திரன் என்பவர் முகமது கசிதான் முஹிதீனை கொலை செய்ததாகவும், அதேநேரம், அந்த இடத்தில் நடராசா முதலாம் எதிரிக்கு உதவியாக இருந்து இக்கொலைக்கு உடந்தையாக இருந்தாரென்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

1-ம் எதிரி சார்பில் அட்வகேட் ஆர். ஈ. தம்பிரத்தினம் புறக்டர் ஆர். ஜெ. செல்வரத்தினம், புறக்டர் எம். சிற்றம்பலம், புறக்டர் வி. மயில்வாகனம். புறக்டர் பரமநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். இரண்டாம் எதிரி சார்பில் அட்வகேட் கே தம்பித்துரை, புறக்டர் என் நடராசாவின் அனுசரணையுடன் ஆஜரானர் 1-ம், 2-ம் எதிரிகளுக்காக புறக்டர் கே குணரத்தினம், புறக்டர் தாமோதரம்பிள்ளை ஆகியோர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தனர் முடிக்குரிய தரப்பில் அட்வகேட் குமார் அமரசேகரா ஆஜரானர்:

விசாரணை இன்றுகாலை தொடர்ந்து நடைபெறும்,

## 'மதகுருமார்மீதும் வழக்குத் தொடரலாம்'

### சாதிப்பாகுபாடு பற்றி உதவி அமைச்சர் விளக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி வடபகுதிப் பொலிஸ் அதிபர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒருமகாநாட்டில் சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம் பற்றியும் சாதிப் பாகுபாட்டுப் பிரச்னை பற்றியும் ஆராயப்பட்டது.

பாதுகாப்புவெளிவிவகார உதவி அமைச்சர் திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி தலைமையில் நடைபெற்ற இம் மகாநாட்டில் வடபகுதிப் பொலிஸ் அதிபர், நியமன உறுப்பினர் திரு. எம். ஸி. சுப்பிரமணியம், இறுபான் மைத் தமிழர் மகாசபை உபதலைவர் திரு. மார்டின் செல்லையா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மாணவர்களை பாடசாலை நிகழ்ச்சிகளுக்காக வெளியே கொண்டு போனுலும் அங்கே சாதிகாரணமாக பாகுபாடு காட்டப்பட்டால் மாணவர்களுக்குப் பொறுப்பாக இருந்தவர் மீது வழக்குத்தாக்கல் செய்ய சமூக குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தில் இடமுண்டு என்று ஒரு கட்டத்தில் தெரிவித்தார்.

கத்தோலிக்க தேவாலயங்களிலும், குறிப்பாக இளவாலை கத்தோலிக்கா தேவாலயத்தில் சாதிப்பாகுபாடு காரணமாக கல்யாண ஆசனங்கள் பூசைநேரத்துக்கு பின்னைகளை நியமித்தல் பிரேத ஆசனங்களில் சேவை விதித்தல் போன்றவை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்படுவதில்லை என்று கேட்ட கேள்வி ஒன்றுக்கு பாதுகாப்பு உதவி அமைச்சர் பதிலளிக்கையில், மதகுருமார்மீது வழக்குத் தொடர சட்டம் இடமளிக்கிறது. நீங்கள் இதுசம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம்" என்று குறிப்பிட்டார்:

அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தில்

## தேவைக்கு அதிகமான அக்கவுண்டன்கள்

### உதவி வீடமைப்பு அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு வியாழன் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தில் தேவைக்கு அதிகமான அக்கவுண்டன்கள் கடமையாற்றுகிறார்கள் இவர்களில் தேவைக்கு அதிகமானவர்களை மற்ற அரசாங்கத் துறைகள் கூட்டுத்தாபனங்களுக்கு மாற்றி அரசாங்க பணத்தின் வீண் விரயத்தைத் தடுக்குமாறு அமைச்சுக்குச் சிபார்சுசெய்யவிருக்கிறேன் என்று வீடமைப்பு நிர்மாண அமைச்சின் உதவி அமைச்சர் திரு. பி எச். பண்டார தெரிவித்தார்.

உதவிஅமைச்சர் அரசாங்கப் பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு இன்று திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டபொழுதே இது அவருக்குத் தெரியவந்தது. இக் கூட்டுத்தாபனத்தில் 17 அக்கவுண்டன்கள் வேலை செய்கிறார்கள். இவர்கள்

(5ம் பக்கம் பார்க்க)

## பாபநாசசிவன் தலைவராகத் தெரிவு

சென்னை, செப் 16 இவ்வருடம் மார்கழி மாதம் தொடங்கவிருக்கும் மியூசிக் அக்கடமி நிகழ்ச்சிகளுக்கு தலைமைதாங்குவதற்கு திரு. பாபநாசசிவன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்

மியூசிக் அக்கடமி நிகழ்ச்சிகளின் முடிவில் திரு பாபநாசசிவனுக்கு சங்கீதகலாநிதி எனும் பட்டம் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்படுவார்.

### கிழக்கு வங்கத்தில் கோரம்

# 2 ஆயிரம் கிராம வாசிகளைக் கொன்று குவித்தனர்!

## பாக். துருப்புக்களின் பழிக்குப்பழி நடவடிக்கை

புதுடில்லி, செப். 16

கிழக்கு வங்காளத்தில் பாகிஸ்தான் துருப்புகள் பழிக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக இரண்டாயிரம் கிராமவாசிகளை கொன்று குவித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 10-ம், 11-ம், 12-ம் திகதிகளில் விடுதலைப் படையினர் நூற்றுக்கணக்கான பாகிஸ்தான் துருப்புக்களை கொலை செய்ததைத் தொடர்ந்தே இந்தப் பழிவாங்கல் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாம்.

ஒரு ரயில் பாலத்துக்கு வெடிவைத்துத் தகர்த்து 14 பாகிஸ்தான் துருப்புகளை விடுதலைப் படையினர் பலியாக்கியதும் இப்பழி வாங்கியதற்கு மற்றொரு காரணமாகும்.

கடந்த செவ்வாய்க்கிழமை பாகிஸ்தான் துருப்புகள் ஒன்றுமறியாத கிராமவாசிகள்மீது பழிக்குப்பழி நடவடிக்கையை மேற்கொண்டனர்.

சுமார் இரண்டாயிரம் கிராம வாசிகள் கொன்று தீர்க்கப்பட்டனர்.

**பலத்த சேதம்**

கிழக்குப் பாகிஸ்தானில் மற்றும் பல பகுதிகளில் பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாக கிழக்குப் பாகிஸ்தானில் சிவில் கவர்னராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் ஏ. எம். மாலிக் கூறினார்.

கிழக்கு பாகிஸ்தானில் தொழில், வர்த்தகம், கல்வி செய்தித் தொடர்பு, போக்குவரத்துப் போன்ற துறைகளில் பெரும் சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## சிறுமியைக் காப்பாற்ற கிணற்றில் குதித்தார்கள் 6 பேர் மாண்டனர்!

அலகாபாத், செப் 16

கிணற்றுக்குள் தவறி விழுந்த 10 வயதுச் சிறுமியொருத்தியைக் காப்பாற்ற அடுத்தடுத்துக் குதித்த 5பேரும் மாண்டார்கள். இந்தப் பரிதாபகரமான சம்பவம் உத்தரப்பிரதேச மாநிலத்தில் தயுலாப்பூர் கிராமத்தில் நடந்தது.

10 வயதுசிறுமி கிணற்றில் தவறிவிழுந்துவிட்டாள். அவளைக்காப்பாற்ற உடனே ஒருவர் குதித்தார். இதைத் தொடர்ந்து மேலும் 4 பேர் கிணற்றுள் குதித்தார்கள். ஆனால் ஒருவர்கூட வெளியே வரவில்லை. உடனே தீயணைக்கும் படையினர் விரைந்து வந்து கிணற்றில் 6 பேருடைய பிணங்களையும் வெளியே யெடுத்தனர்.

## முத்திரை மோசடிகளைத் தடுக்கும் பொலிஸ்படை

லண்டன், செப் 16

பணத்தைப் போலவே தபால் முத்திரைகளும் களவாடப்படுகின்றன கள்ள நோட்டுகள் போலவே கள்ள முத்திரைகளும் அச்சடிக்கப் படுகின்றன.

களவாடப்பட்ட முத்திரைகளையும் கள்ள முத்திரைகளையும் கண்டு பிடிப்பதற்கென்று 'ஸ்கொட்லண்ட் யார்ட்'டில் ஒரு 'முத்திரைப் படை' அமைக்கப்பட்டுள்ளது ஸ்கொட்லண்ட் யார்ட் அலுவலகத்தின் முதல் மாடியில் இயங்கும் இந்த 'முத்திரைப்படையினர்' வசம் உள்ள முத்திரைகளின் எண்ணிக்கையையும்- வகைகளையும் பார்க்கும் முத்திரை சேகரிப்பாளர்கள் நிச்சயம் பொறுமைப்படவே செய்வார்கள். அவ்வளவு தொகைதொகையாக அவர்களிடம் முத்திரைகள் உள்ளன.

இந்த முத்திரைகளுடனும் முத்திரை வியாபாரிகளின் உதவியுடனும் களவு போன அல்லது மோசடி செய்யப்பட்ட முத்திரைகளைத் தேடிக்கண்டுபிடிப்பது படையைச் சேர்ந்த துப்பறியும் பொலிசாரின் வேலையாகும் முத்திரைத் திருட்டுக்கள் அதிகரிப்பதாக வந்த ஏராளமான புகார்களை அடுத்து அமைக்கப்பட்ட இந்த முத்திரைப் படையால் இப்போது திருட்டுகளும் மோசடிகளும் பெருமளவில் குறைந்து விட்டனவாம்.

ஒருவர் தனது முத்திரைகள் திருடுப் போய்விட்டதாகப் புகார் செய்த 20 நிமிடங்களில் 72 முத்திரை வியாபாரிகளை இப்படை உஷார்ப் படுத்தும். இதனால் திருட்டு முத்திரைகளை விற்கக் கொண்டுவருவோரை இந்த வியாபாரிகள் அடையாளம் கண்டுபிடித்து விடுவார்கள். சாதாரண முத்திரைகளை அரிய முத்திரைகளாகக் காட்டுவதற்கு அதன்மீது மாறுதல்கள் செய்தால் அதையும் இப்படை பூதக் கண்ணாடிகளின் உதவியுடன் கண்டுபிடித்து விடும்.

### பஸ் சேவை தடைப்பட்டது

வேலணை, வியாழன்

யாழ்ப்பாணத்திற்கும் வேலணை வங்களாவடிக்குமிடையில் காலை 8 மணிக்கு தினமும் ஒரு பஸ் சேவை நடைபெற்றால் மக்களும் மாணவர்களும் காலதாமதமின்றிப் பிரயாணத்தை மேற்கொள்ள வசதியாக இருக்குமென வேலணைக் கிராம சீர்திருத்தச் சங்கம் இ. போ. சபையைச் சில மாதங்களின் முன் கோரியதையடுத்து சிலதினங்கள் இச்சேவை நடைபெற்றது. எனினும் இச்சேவை தொடர்ந்து நடைபெறாது இடையே தடைப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் மீண்டும் கஷ்டமடைந்துள்ளனர்.

### 'மரக்கறிக் கூட்டுத்தாபனம் வேண்டும்'

கோவிடை, வியா.

'நாட்டில் நெற்செய்கைக்கு அடுத்ததாக மரக்கறிச் செய்கை முக்கியத்துவம் பெறுவதால் மரக்கறிக் கூட்டுத்தாபனம் ஒன்று அமைக்கப்படவேண்டும்' என்று அரசைக் கோரும் தீர்மானமொன்றை ஹேவகெட்ட கிராமசபை அரசாங்கத்துக்கு அனுப்பிவைத்துள்ளது

மரக்கறிவகைகள் அடிக்கடி குறைகிறதாலும் விவசாயிகள் விவசாய உபகரணங்களைப் பெறுவதில் கஷ்டமேற்படுவதாலும் இக்கஷ்டங்களை நிவர்த்திசெய்ய மரக்கறிக் கூட்டுத்தாபனம் அவசியமெனவும் மேற்படி கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சின்னமடு உற்சவம்

நாரந்தனை, வியா

தீவுப்பகுதியிலுள்ள கத்தோலிக்க யாத்திரை ஸ்தலங்களில் ஒன்றான சரவண சின்னமடு செபமாலை மாதா தேவாலய இரண்டாவது வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 8ம் திகதி ஆரம்பமாகி பதினேழாம் திகதி வரை நடைபெறவுள்ளது. தினமும் ஆராதனைகள் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8மணிக்கு முடிவடையும்.

### சிண்டிகேற் காங்கிரஸில் பிளவு

## காமராஜ்- மொரார்ஜி கருத்து வேறுபாடு வலுக்கிறது!

சென்னை, செப். 16

'சிண்டிகேற்' காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மொரார்ஜி தேசாய் கோஷ்டியாகவும், காமராஜர் கோஷ்டியாகவும் தனித்தனி பிரிந்து இரு கோஷ்டிகளும் கட்சியிலிருந்தே பிரிந்து செல்லக்கூடிய விதத்தில் பிளவு ஏற்பட்டுள்ளதாகக்கூறப் படுகிறது.

காமராஜர் கோஷ்டியைச் சேர்ந்த பழைய டில்லி மந்திரி ராம்சுபகசிங் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மொரார்ஜிதேசாய் கோஷ்டி தலைமைப் பீடத்தை வற்புறுத்துகிறது.

இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை ஆதரிப்பதா வேண்டாமா என்பதில் தான் இந்தப் பிளவு ஏற்பட்டதாம்.

முன்னாள் உதவிப் பிரதமர் மொரார்ஜி தேசாயும் அவருடைய கோஷ்டியைச் சேர்ந்த எஸ். கே. பட்டீலும் இந்த ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்தார்கள். ஆனால் காமராஜரும், அவருடைய கோஷ்டியைச் சேர்ந்த பார்லிமெண்ட் பழைய எதிர்க்கட்சித் தலைவர் ராம் சுபக்சிங், மைசூர் பழைய முதல் மந்திரி வீரேந்திரா பட்டீல் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தை ஆதரித்தார்கள்

இத் தகராறின் எதிரொலியாக மொரார்ஜி கோஷ்டியை ராம் சுபக்சிங் கடுமையாகத் தாக்கிப் பேசினர். இதனைத் தொடர்ந்து 'சிண்டிகேட்' கட்சியில் இருந்து வந்த உள்சண்டை உச்சக் கட்டத்தை அடைகிறது.

சிண்டிகேட்டின் உள்கட்சி சண்டையை தொடர்ந்து, கட்சியில் இருந்து ராஜினாமாச் செய்துவிட்டு, இந்திரா காங்கிரஸில் சேர்ந்து விடலாமா என்றும் ராம் சுபக்சிங் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

இதுபற்றி ஒரு கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் கொள்கைப் பிரச்னையில் கட்சியில் மேலும் பிளவு வலுத்தால் புதிய திட்டம் வகுத்துச் செயல் படுவேன்' என்று கூறினார்.

## நிர்மாண யந்திரங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை

### விரைவில் இலங்கையில் நிறுவப்படும்

லண்டன், செப் 16

நிர்மாண வேலைகளுக்கான இயந்திரங்களை உள்நாட்டிலேயே தயாரிக்க அரசாங்கப் பொறியியல் கூட்டுத்தாபனம் முன்வந்துள்ளது. இதற்கென ஒரு தனித் தொழிற்சாலையை விரைவில் இலங்கையில் அமைக்கலாம் என இக்கூட்டுத்தாபனம் எதிர்பார்க்கிறது.

இதற்குரிய பயிற்சியை பெறும் பொருட்டு கூட்டுத்தாபனம் தனது இயந்திரப் பொறியியலாளர்களில் ஒருவரைப் பிரிட்டனுக்கு அனுப்பவிருக்கிறது. இவர்தான் திரு எப் எச் ரொசெய்ரோ. செப்டம்பர் மாதம் 21-ந் திகதி இவர் பிரிட்டனுக்குச் செல்கிறார்.

சல்போர்ட் பல்கலைக்கழகத்தில் உற்பத்திப் பொறியியலில் அவர் ஆறு மாத 'டிப்ளோமா' பயிற்சி பெறுவார். இப்பயிற்சியை அவர் வெற்றிகரமாக முடித்தபின் இத்துறையில் எம் எஸ்ஸி. படிக்க திரு ரொசெய்ரோவை அனுமதிப்பது பற்றி பல்கலைக்கழகம் ஆலோசிக்கும்.

கொழும்புத் திட்ட தொழில்நுட்ப கூட்டுறவுத் திட்டத்தின் கீழ் பிரிட்டன் இப்பயிற்சியை ஒழுங்குசெய்துள்ளது.

### "இராமநாதன் முத்திரை வெளியிடுக"

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழுக்கும் சைவத்திற்கும் இந்நாட்டிற்கும் பெருந்தொண்டாற்றிய சேர்பொன் இராமநாதனின் ஞாபகார்த்த முத்திரையை அரசு வெளியிட வேண்டும் என கொடிகாமம் சேர் பொன். இராமநாதன் கழக வருடாந்தக் கூட்டத்தில் புதிய தலைவரான திரு. என். ஆர் எஸ் சிவராமலிங்கம் கூறினார்.

கொடிகாமம் திருநாவற்கரசு மடாலயத்தில் நடந்த இக்கூட்டத்தில் இம்மாதம் கொடிகாமத்தில் கலைவிழா நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

செயலாளராக திரு. பொ சண்முகநாதனும், தனாதிகாரியாக திரு. சி ராஜகுமாரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# 'வசதியற்ற பாடசாலைகளை உயர்த்துவதற்கு வழி'

யாழ்ப்பாணம், வெள்ளி

"எந்த ஒரு வசதியற்ற பாடசாலையையும் பெற்றோர் ஆசிரியர் ஒத்துழைப்பின்மூலம் உயர்ந்த நிலைக்குக் கொண்டுவரமுடியும். கல்வித்துறையில் வளர்ச்சி ஏற்படவேண்டுமானால் பாடசாலைகளின் வசதிகளும் அதிகரிக்கவேண்டும்"

இவ்வாறு மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலை தலைமை ஆசிரியர் திரு. வி. எஸ். சந்தையா பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. சந்தையா மேலும் பேசுகையில் இப்பாடசாலையைப் பொறுத்தவரை பெற்றோரின் ஆதரவும் ஒத்துழைப்பும் இன்னும் தேவைப்படுகிறதென்றும் தென்மராட்சியிலேயே மிகவும் வசதியற்ற நிலையிலுள்ள ஒரு பாடசாலை இது என்றும் எடுத்துக்கூறி இப்பாடசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் வடபகுதி வித்தியாதிபதி விசேஷ அக்கறை காட்டிவருவதாகவும் குறிப்பிட்டார். வித்துவான் திரு. ச. சந்தையா பேசுகையில் பாடசாலைத் தேவைகள்பற்றி விபரமாக விளக்கிகூறினார்.

ரு. வே. இரத்தினம் பேசுகையில் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு பெற்றோரும் சில தியாகங்கள் செய்ய முன்வரவேண்டும் என்றும், ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் திரு. நா. பொன்னம்பலம் பேசுகையில் இப்பாடசாலை முன்னேற்றத்துக்கு பெற்றோர் ஆற்றவேண்டிய பங்குபற்றியும் குறிப்பிட்டார்கள். திரு. இ. சட்டநாதரும் மற்றும் சிலரும் பெற்றோர்கள் சார்பில் பேசுகையில் பாடசாலைத் திருத்தங்களுக்கு தம்மாலான உதவி செய்ய எப்போதும் முன்நிற்பதாகக் கூறினார்கள்.

பின்வருவோர் புதிய உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்: போஷகர்: நா. பொன்னம்பலம், நா இளையப்பா தலைவர் வி. எஸ். சந்தையா, உபதலைவர் ச சந்தையா, காரியதரிசி சோ. அருளம்பலம், தனாதிகாரி ஆ. சுப்பிரமணியம், 6 பேர்கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது. (கு.வி.ம.)

# 'குருவை மதித்துப்பேணினால் வளமானவாழ்வு கிடைக்கும்'

## —பண்டிதமணி

யாழ்ப்பாணம், வெள்ளி

ஒரு கோயிலைச் சேர்ந்த பல குடும்பங்கள் தமக்குக் கிடைத்த குருவை எவ்வித குறையுமின்றிப் பேணி வருவார்களானால் அவர்களது வாழ்க்கை வாழ்வுநெறியும் தெய்வத்துள் வைத்துப் போற்றப்படும். இப்பகுதி மக்கள் குடிவிளங்க சங்கம சேவைகளிற் சிறந்தவர்களாய்த் தம்குருவைப் பேணி நல்லமுறையில் கௌரவிக்க முன்வந்திருப்பது சிறந்த பண்பாகும்"

இவ்வாறு நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசராசேசுவரியம்பாள் கோவில் மகாகும்பாபிஷேகத்தின்போது பிரதம குருவாகப் பணிபுரிந்த சிவத்திரு க. சிவபாதசுந்தரக் குருக்களுக்கு இக்கோவில் பரிபாலன சபையும், சைவ சமய அபிவிருத்திக் கழகமும் அளித்த பாராட்டு விழாவின்போது பேசுகையில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டார். மேலும் தொடர்ந்த அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

சரீரத்துக்கும் — ஆன்மாவுக்கும் உள்ள தொடர்பும் சரீரம், யாரிடமிருந்து எவ்வாறு கிடைத்தது என்பதும், இது கிடைத்ததின் நோக்கமும் எவையென அறிவிக்கும் தகைமை உடையவர் திருவருள் கைவந்த குரு ஆவர். உரிய பருவத்தில் குழந்தைகள் சமய தீட்சை பெற்றுச் சந்தியாவந்தனம், ஆலயவழிபாடு முதலியன செய்யவும் குருவின் உபதேசம் அவசியம். இவைவிட வாரத்துக்கு ஒருமுறை ஆயினும் குடும்பத்தினர் யாவரும் குருவைத் தரிசித்து உபதேசம் பெற்றுக்கொள்வது இன்றியமையாதது. கிரியை, சங்கம சேவைக்கு வழிகாட்டும் குருவுக்கே குரு லிங்க, சங்கமம் என்ற வரிசையில் முதலிடம் கொடுக்கப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும்.

விவசாயக் கடன்

# முன்பாக்கி செலுத்தாதவரும் கடன்பெற வாய்ப்பு

அராலி, வியாழன்

வங்கிகள் மூலம் அரசாங்கத்திடம் விவசாயக் கடன் பெற்றுக் குறித்த தவணைக்குள் அக்கடனைச் செலுத்தாத விவசாயிகளுக்கு அரசு சலுகை வழங்கியிருக்கிறது. முந்திய கடன் திருப்பிச் செலுத்தப்படாத போதும் இவ்வாண்டும் அவர்களுக்கு அரசு கடன்வழங்க முன்வந்துள்ளது.

புதிய இனநெல் பயிரிட விரும்புவோர் தமது பழைய கடனைச் செலுத்தாதபோதிலும் தமக்குத் தேவையான உரம், கிருமிநாசினி முதலியவற்றைத் தத்தம் கூட்டுறவுச் சங்கங்களில் பொருட்களாகக் கடனுக்குப் பெற்றுக்கொள்ள வசதியளிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரு நிபந்தனை இவர்கள் அறுவடை முடிந்ததும் நெல்லை சங்கத்தில் ஒப்படைத்துக் கடனைத் தீர்க்கவேண்டும்.

## இடமாற்றம் ரத்து

சுழிபுரம், வியாழன்

சங்கானை ஐக்கிய கூட்டுறவு வங்கிக் கிளையில் காசாளராகக் கடமையாற்றிய திரு. இ. செல்வரத்தினம் நெல்லியடி கூட்டுறவு வங்கிக்கு இடமாற்றம் செய்யப்பட்டது ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நெல்லியடி வங்கியில் கடமையாற்றிய திரு. வி. கணேசலிங்கத்திற்குக் கிடைத்த இடமாற்றமும் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

சிங்களத் தேர்ச்சியும் பாடசாலை ஊழியரும்

# ஒரு பரீட்சைக்கேனும் தோற்றாத புதிய ஊழியர் நிறுத்தப்படுவர்

## 45 வயதுக் காரருக்குச் சலுகை

பருத்தித்துறை, வியா.

"சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்திபெறத் தவறியதற்காக நிறுத்தப்பட்ட வேதன ஏற்றங்கள் ஒரு வருடக்கு விதிக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிப் பரீட்சையில் அவர் சித்திபெற்ற நாள் தொட்டு மீளவளிக்கப்படல் வேண்டும். ஆனால் பரீட்சையில் சித்தியுறுவதற்கு முன்னுள்ள காலத்தொடர்பில் நிறுத்தப்பட்ட வேதன ஏற்ற நிலுவைத் தொகை கொடுபடமாட்டாது"

இவ்வாறு உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு பி மகாதேவா பாடசாலைகளிற் கடமையாற்றும் சகல ஆசிரியரல்லா ஊழியருக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். அச்சுற்றறிக்கை மேலும் கூறுவதாவது.

"நியமனத் தலைவர்கள், வழமையான தகுதிகாண் நிலை கடந்தும் விதிக்கப்பட்டுள்ள சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைகள் ஒன்றிலும் இச்சுற்றறிக்கைத் தேதிவரை சித்திபெய்தாது ... அவற்றில் எதற்கேனும் தோற்றியுள்ளவராய் விளங்கும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களைப் பரீட்சையில் சித்தி எய்தத் தவறியமைக்கு விளக்கம் தருமாறு கோருதல் வேண்டும்.

"ஆனால் வழமையான பரீட்சார்த்த நிலைக்காலம் முடிவுற்றும், சிங்களத்தேர்ச்சிப் பரீட்சைகளில் ஒன்றுக்கேனும் தோற்றாதவர்களின் தகுதிகாண்நிலை நியமனம் ஒழுங்காக அறிவித்தல் கொடுத்து முடிவுறுத்தப்படல்வேண்டும்'

45 வயதடைந்த ஊழியர் சம்பந்தமாகச் சுற்றறிக்கை கூறுவதாவது:

'45 வயதை அடைந்த ஊழியர் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தி எய்தாமையின் காரணமாக நியமனம் உறுதிப்படுத்தப்படாதிருப்பின், இந்நிபந்தனையைப் பூர்த்தி செய்வதிலிருந்து விலக்களிக்கப்பட்டு, ஓய்வூதியமோ பணிக்கொடையோ அவர்கள் பெறுவதற்கு வழிசெய்யும் வகையில், சேவையிறுதி முடிவுறு காலமுன் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்தப்படல்வேண்டும். நிறுத்தப்பட்ட ஏற்ற வேதனங்கள் அவர்களுக்கு மீளவளிக்கப்படல்வேண்டும்.'

சுழிபுரம் கி. சபை

## வாகனவரி வசூலிக்கும்

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் கிராம சபையினர் வாகனவரி கட்டாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சங்கானைப் பொலிசாரின் உதவியை நாடியுள்ளனர். பொது இடங்களில் நிறுத்தப்படும் மாட்டுவண்டிகள், சைக்கிள்கள் பரிசோதிப்பதில் இவ்வாரம் தொடக்கம் ஓர் திட்டம் செயல்படவுள்ளது. இத்திட்டத்தின்படி ரூபா ஆயிரத்துக்கு மேல் திரட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 17—9—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

249 மீ அலை 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை 7-00 மண்ணுக்கேற்ற தமிழ் 7-30 மெல்லிசை, 8-00 பயனுள்குரான்.

இரவு 6-10 பொன்னாலை வரதராஜப்பெருமான் ஆலய உற்சவ அஞ்சல், 7-00 உரை நிகழ்ச்சி, 7-15 நாளவசந்தியக் கச்சேரி, 7-45 ஐ நா. பற்றிய உரைநிகழ்ச்சி, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 விஞ்ஞான உரைநிகழ்ச்சி, 9-40 பாட்டு. 10-30 செய்தித் தொகுப்பு.

## பெரியார்கள் நினைவுதினம்

சுழிபுரம், வியாழன்

பண்ணாகம் கலைமன்றத்தினர் அடுத்த மாதம் 2ம் திகதி மூழக்கம்பரையில் மறைந்த தமிழ்ப் பெரியார்களின் நினைவுதினத்தை விமரிசையாக கொண்டாடவுள்ளனர். பல அறிஞர்கள் நினைவு அஞ்சலி உரையாற்றுவார்கள். கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. இதற்கான ஒழுங்குகளை செயலாளர் திரு நா மோகனநாவுக்கரசு கவனித்துவருகின்றார்.

திணைக்களங்களின் இந்து ஊழியரின்

# கலைமகள் பூஜை தமிழில் நடைபெறும்

வெள்ளவத்தை, வியாழன்

உள்நாட்டு இறைவரித் திணைக்கள இந்து ஊழியர் கழகத்தார் இம்மாதம் 27-ம் திகதி சரஸ்வதி பூஜையை வெகுசிறப்பாகக் கொண்டாடவிருக்கின்றனர். கடந்தவருடம் போலவே இவ்வருடமும் தமிழில் பூஜைகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக கலைமகள் விழாக் குழுவினருள் ஒருவரான திரு. தம்பசிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இவர்களைத் தொடர்ந்து வேறும் சில திணைக்களங்களின் இந்து ஊழியர் சங்கங்களும் தமிழில் கலைமகள் பூஜையை நடாத்தவிருப்பதாகத் தெரியவருகிறது.

## 4-வது ஆண்டு விழா

பருத்தித்துறை, வியா

பொலிகண்டி ஐக்கியவிளையாட்டுக் கழகத்தினரின் நாலாவது வருடாந்த நிறைவுவிழாவும் வருடாந்த விளையாட்டுப் போட்டியும் இம்மாதம் 19-ம் திகதி பொலிகண்டி சைவவித்தியாசாலை விளையாட்டுமைதானத்தில் நடைபெறவிருக்கிறது. வடக்கு - கிழக்கு காரியாதிகாரி மூ தம்பிமுத்து பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார். வினோத உடைப் போட்டி. ஒருமைல் ஓட்டம், கிறீஸ்கம்பம் ஏறுதல் ஆகியவிளையாட்டுகள் இடம்பெறுகின்றன.

## 'பேதமின்றி செயலாற்றுங்கள்'

மானிப்பாய், வியாழன்

"தலைமையாசிரியர், உதவி ஆசிரியர் என்ற பேதமில்லாமல் எல்லா ஆசிரியர்களும் தமது பாடசாலை என்ற குறிக்கோளுடன் கடமை புரியவேண்டும்"

இவ்வாறு கட்டாதெரு இந்து தமிழ்க்கலவன் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு த பசுபதிப்பிள்ளை அப்பாடசாலையிலிருந்து இடமாற்றம் பெற்றுச்செல்லும் திருவாளர்கள் ஆ ஞானமூர்த்தி, ந மாணிக்கம், ச மகேசு. சி சிவரத்தினம், செல்வி சிந்தாமணி ஆகியோருக்கு அளித்த பிரியாவிடை வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

எல்லா ஆசிரியர்களும் தமது தொழிற்சங்கத்தில் அங்கம்வகிக்க வேண்டுமெனவட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் பொதுக்காரியதரிசி திரு. இ. வேலாயுதர் பேசுகையில் கூறினார்.

வசாவிளானில்

## ரே. க. வாலிபர் மன்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"மாணவர்கள் ஏட்டுப் படிப்புடன் மட்டும் நின்றுவிடக்கூடாது அவர்கள் பலவித திறப்பாற்றல்பொருந்தியவர்கள். அவற்றை வெளிக்காட்ட வசதியின்மையால் நீறுபூத்த நெருப்பாய் இருக்கிறார்கள். அவர்கள் வல்லமைகளை வெளிக்காட்டி அவர்களைப் பேச்சாளர்களாகவோ, கவிஞர்களாகவோ மிளிரச் செய்யவேண்டும். அதற்குக் கழகங்களும் மன்றங்களும் உதவ வேண்டும்."

இவ்வாறு வசாவிளான் ரோமன் கத்தோலிக்கதமிழ்க்கலவன் பாடசாலையில் மாணவமன்ற ஆரம்பக் கூட்டத்தில் உரையாற்றிய பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. பொ நடராசா கூறினார். ஆசிரியர் திரு சி, சுப்பிரமணியம்; ஆசிரியை திருமதி க கதிரேசு ஆகியோரும் பேசினர் மன்ற உத்தியோகஸ்தர் விபரம் வருமாறு:

போஷகர் தலைமையாசிரியர் திரு பொ நடராசா; தலைவர்: திரு சி சுப்பிரமணியம்; உபதலைவர்: திருமதி க கதிரேசு; செயலாளர்: செல்வி வே ஹேமலதா உபசெயலாளர்: ந தனபாலசிங்கம்; பொருளாளர் அ லூயிஸ் தேவானந்தம்; பொருள் மேற்பார்வையாளர்: ஆசிரியர் திரு ஞா குகசப்பிள்ளை.

## ஊழியர் சுற்றுலா

யாழ்ப்பாணம், வெள்ளி

சங்கானை மின்தறி ஆலை ஊழியர்கள் இம்மாதம் 20-ம் திகதி நெடுங்கேணி, பரந்தன் முதலிய இடங்களுக்கு சுற்றுலாவொன்றை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

புங்குடுதீவில்

## கோவில் திருட்டு

புங்குடுதீவு வியாழன்

புங்குடுதீவு ஆலடித் திருப்பெருந்துறை ஸ்ரீ நாகதம்பிரான் கோவிலில் திருடர்கள் உட்புகுந்து அங்குள்ள பூசைப் பாத்திரங்கள், குடங்கள், செம்புகள் முதலியவற்றைக் களவெடுத்துச்சென்றுள்ளனர். கடந்த ஞாயிறன்று இரவு இக்களவு நடைபெற்றுள்ளது. கோவில் ஓடு பிரிக்கப்பட்டுக் கதவுகள் யாவும் திறந்து கிடக்கக்காணப்பட்டதுடன் விக்கிரகங்களும் பெயர்க்கப்பட்டுக் கிடந்தன. ஊர்காவற்றுறைப் பொலிஸார் இதுபற்றிப் புலன்விசாரணை செய்து வருகின்றனர்.

'லிந்துலை பஸ் விபத்தில்

# பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவும்'

அட்டன், வியாழன்

லிந்துலை பஸ் விபத்தில் உயிர்துறந்தவர்களின் குடும்பத்தினர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் நிவாரணம் வழங்குவதற்கு இ.போ.சபை முன் வந்திருப்பது வரவேற்கத் தக்கது. இந்த நிவாரணம் தகுந்த நஷ்டஈடாய் இருக்க வேண்டும். அதோடு நஷ்ட ஈடுகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு காலதாமதமின்றி வழங்கப்படல் வேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் துணைச் செயலாளர் திரு கோ. இ. து. கோவிந்தராசன் அட்டன் இ.போ.ச. பஸ் விபத்து பற்றி பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இப் பகுதியில் அண்மையில் நடந்துள்ள இரண்டாவது விபத்து இதுவாகும். விபத்தில் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் பெரும்பாலோர் தோட்டத் தொழிலாளர்களாய் இருக்கிறார்கள். எமக்குக் கிடைத்த தகவல்களின்படி இதுவரை 21பேர் உயிர் துறந்துள்ளதாகவும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது. பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு கழகத்தின் சார்பில் எமது அனுதாபத்தையும் துக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நஷ்டஈடு வழங்குவதுடன் நின்றுவிடாது, இதுபோன்ற கோரவிபத்துகள் இனிமேலும் நடவாதிருக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும், விபத்துக்கான அடிப்படைக்காரணங்களை ஆராய்ந்தையும் அறிவதற்கு இ போ ச முயற்சிக்க வேண்டுமென்றும் இதற்குச் சரியான வழி பூரணவிசாரணையொன்று நடாத்தப்படுவதற்கு சட்டபூர்வமான கமிஷன் ஒன்றை நியமிப்பதேயாகுமென்றும் காலம் தாழ்த்தாது இதற்கு அரச நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## வேலணை ம. ம. வி. ப. மா. சங்கம்

வேலணை, வியா

வேலணை மத்திய மகா வித்தியாலயப் பழையமாணவர் சங்க ஆண்டுப்பொதுக் கூட்டம் இம்மாதம் 19-ம் திகதி கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திரு பி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் ஊர்காவற்றுறை ஆட்சிமன்ற உறுப்பினர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். கல்லூரியின் வெள்ளிவிழா கொண்டாட்டத்தின் போது பழையமாணவர்களின் பங்கு பற்றி இதில் ஆலோசிக்கப்படும்.

# 'மாவட்ட அதிபர்களிடம் பொறுப்பளிக்கவும்'

குருநகர், வியாழன்

திறைசேரி 750-வது சுற்று நிருபத்தின்படி அரசாங்க அலுவலகப்பணியாளர்பதவி தரமுயர்வுகள் இரண்டாம் தரத்திலிருந்து முதலாம் தரம்வரை மூப்பு டயப்பின்படி அனைத்தும் இலங்கை பூராவும் திறைசேரியே செய்து வருவதால் பதவி உயர்வு நியமனங்கள் கொடுக்கக் காலதாமதமாவது மட்டுமன்றி தேவைக்கேற்ப மாவட்ட ரீதியில் பதவி உயர்வு நியமனங்கள் கொடுக்க முடியாத நிலை இருந்து வருவதாகவும் இதனால் சில மாவட்டங்களில் உள்ள கச்சேரி இலாகாக்களிலும் சிறுவழியர்களுக்கு வேலைகள் அதிகரித்து வருவதாகவும் எனவே இரண்டாந்தரப் பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பதவி தரமுயர்வு நியமனங்களை மாவட்ட அதிபர்கள் நியமிக்கக்கூடிய வழிவகைகளைச் செய்தால் தேவைக்கேற்ப அந்தந்த மாவட்டங்களில் பதவி உயர்வுகளை குறிப்பிட்ட காலங்களில் செய்வதன்மூலம் அலுவலக வேலைகள் துரிதமடைய உதவியாக இருக்குமெனவும் அரசாங்க பொது சேவைத் தொழிலாளர் சங்க யாழ் கிளைச் செயலாளர் எஸ். ஆறுமுகம் அரசாங்க பொதுசேவைத் தொழிலாளர் சம்மேளனத் தலைவருக்கு அறிவித்துள்ளார்.

தொலைபேசி சீர்கேடு காலங்களில்

# பத்திரிகைத் தந்திகள் வயர்லஸ் மூலம் அனுப்பப்படும்

### தபால் அமைச்சர் நடவடிக்கை

கொழும்பு, வியா

தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் தனது நிரந்தரக் காரியதரிசி திரு. சி. ஜே. சேரசிங்காவுக்கு உத்தரவிட்டதன்பேரில் தொலைபேசித் தொடர்பு சீர்குலைந்திருக்கும் நேரங்களில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படும் பத்திரிகைத்தந்திகளை வயர்லஸ் மூலம் அனுப்பிவைக்குமாறு தொலைபேசித் தொடர்பு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

'ஈழநாடு' நிறுவனத்தின் அதிகாரிகள் தபாலமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியரைக் கண்டு பேசியதையும், செனட்டர் எஸ். நடராசா இதுபற்றி செனட்டில் கேள்வி எழுப்பியதையும் தொடர்ந்து அமைச்சர் இந் நடவடிக்கையை எடுத்துள்ளார்.

செனட்டர் எஸ். நடராசா இதுபற்றி செனட்டில் மேலும் பேசுகையில், பத்திரிகைக்கு அனுப்பப்படும் தந்திகள் தொலைபேசி சீர்கேடுகள் ஏற்படும் காலத்தில் சில வேளைகளில் சாதாரணத் தபால் மூலம் அனுப்பப்படுகிறது. இதனால் அத்தந்திகளில் தெரிவிக்கப்பட்ட செய்திகளின் மதிப்பும் குறைந்துவிடுகிறது. இது பத்திரிகைக்குப் பெரும் கஷ்டம் ஏற்படுவதற்கும் பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படுவதற்கும் காரணமாகிவிடுகிறது. இதற்கோர் முடிவு காணப்பட வேண்டுமென்றார்.

இவ்விஷயத்தை தன் கவனத்தில் எடுத்துக்கொள்வதாக அமைச்சர் திரு குமாரசூரியர் உறுதியளித்தார். இதைத்தொடர்ந்த ஈழநாடு அதிகாரிகள் இவ்விஷயமாக அமைச்சரைக் கண்டு பேசியதும், அமைச்சர் உடனடி நடவடிக்கைக்கு உத்தரவிட்டார்.

மத்திய தபால் நிலையத்தில் பத்திரிகைச்செய்திகள் அனுப்புவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்குமாறும் பத்திரிகைத் தந்திகளும் தனியார் தந்திகளும் தொலைபேசி சீர்கேடு காலங்களில் வயர்லஸ் உள்ள இடங்களுக்கு வயர்லஸ் மூலம் தந்திகளை அனுப்பவும் பெற்றுக்கொள்ளவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

(இ பீ எ)

## பாகிஸ்தான்..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பாகிஸ்தான் உள்நாட்டு விவகாரத்தில் இலங்கையின் தலையிடாக் கொள்கைக்கு ஹிந்துஸ்தான் பத்திரிகையிலேயே ஆதாரமுள்ளது. கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னை அந்நாட்டின் உள்நாட்டு விவகாரமென்பதே இலங்கையின் கொள்கையாகும். இந்தியா கூட இதனை கிழக்கு மேற்குப் பாகிஸ்தான் உள்நாட்டு விவகாரம் என்றே கருதுகிறது. இந்த விஷயத்தில் உலகின் பெரும்பாலான நாடுகள் கொண்டிருக்கும் தங்கள் இயல்புக்கேற்ற கொள்கையை விடுத்து இலங்கை மட்டும் தனியான கொள்கை கொண்டு இயங்கமுடியாது. இந்தியா உட்பட ஒருநாடு கூட இதுவரை வங்காள தேசத்தை அங்கீகரிக்கவில்லை. (இ பீ ஏ)

(1ம்பக்கத் தொடர்ச்சி)

மாதம் ஒன்றுக்கு ரூபா 700லிருந்து 2000 வரை சம்பளமாகப் பெறுகிறார்கள் இவ்விதம் இவர்கள் தேவைக்கு அதிகமாக இருப்பதினால் அரசாங்கத்தின் பணம் வீண் விரயமாகிறது என்று திரு. பண்டார அமைச்சுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'வடக்கில் மட்டுமல்ல

# சாதிப் பிரச்னை தெற்கிலும் இருக்கிறது'

### அம்பலாங்கொடை எம். பி. கூறுகிறார்

குருநகர், வியாழன்

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தன்னலமற்ற சேவையாற்றியதால்தான் திரு எம் சி சுப்பிரமணியத்தை அவர் பாடுபட்ட மக்களின் பிரதிநிதியாக திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்காவின் அரசாங்கம் நியமித்துள்ளது. அவரது சேவைக்கு மதிப்பளிக்கும் நோக்குடனும் உரிமை மறுக்கப்பட்டு கஷ்டப்படுகின்ற மக்களுக்கு வசதி செய்யும் நோக்குடனும் அவரை நியமன உறுப்பினராக இன்று அரசு தெரிந்திருக்கலாம். அடுத்த முறை எம் சி சுப்பிரமணியம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவராக அனுப்பப்படுவார் என எதிர்பார்க்கின்றேன்"

இவ்வாறு நேற்று மாலை யாழ் திறந்தவெளியரங்கில் நடைபெற்ற கார் அன்பளிப்பு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அம்பலாங்கொடை எம் பி திரு எல் சி டி சில்வா குறிப்பிட்டார்.

அகில இலங்கை சிறுபான்மை மகாசபை உபதலைவர் திரு மாட்டின் செல்லையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு சில்வா தொடர்ந்து பேசியதாவது: யாழ்ப்பாணத்தில் எனது கட்சி சார்பில் கலந்துகொள்ள வேண்டிய திரு விசுவநாதன் எம் எம் பி தற்பொழுது வெளிநாட்டிலிருப்பதால் அவருக்காக எமது கட்சி சார்பில் இவ் விழாவில் கலந்துகொள்ள எனக்கு எதிர்பாராத வாய்ப்புக் கிடைத்தமையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

### தெற்கிலும் சாதிப் பிரச்னை

சாதிப் பிரச்னை வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் இருக்கின்றது. பிற்போக்குச் சக்திகளால்தான் இந்நிலை தொடர்ந்திருந்து வந்தது. 32 வருடகால போராட்டத்தின் பின்னர் பண்டாரநாயக்கா ஆட்சியில்தான் இதற்கு விடிவு ஏற்பட்டது. ஒடுக்கப்பட்ட மக்களின் கஷ்டத்தை உணர்ந்ததனால்தான் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா உங்களுக்கு ஆட்சிமன்றத்தில் ஒரு பிரதிநிதித்துவத்தை கொடுத்துள்ளார். அவரை நீங்கள் பாராட்டுவதுமட்டுமல்ல அடுத்த தேர்தலில் எம் சி யை நீங்களாகவே பாராளுமன்றத்திற்கு தெரியவேண்டும் என்றார்.

நீர்கொழும்பு முன்னாள் மேயரும் தற்போதைய நியமன எம். பி. யுமான போல் பெரேராகோ பேசுகையில், நானும் எம். சி. சுப்பிரமணியமும் ஒவ்வொரு சமூகத்தின் சார்பில் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கின்றோம். இங்குள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் நிலை எனக்கும் நன்றாகத் தெரிகின்றது எனவே பாராளுமன்றத்தில் எனது உதவியும் ஒத்துழைப்பும் இவருக்கு என்றும் இருக்கும்' என்றார்.

அரசாங்க அதிபர் விமல் அமரசேகரா பேசுகையில், திரு. எம். சி. சுப்பிரமணியத்தின் சேவைக்கு இந்த மக்கள் முன்னரே இந்தக் கார் பரிசைக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் இன்று கொடுப்பதிலும் கருத்திருக்கின்றது. கச்சேரியில் சிறுபான்மை மக்களுக்காக ஓடித்திரியும் திரு. சுப்பிரமணியம் கச்சேரியில் ஒரு முறை மகிழ்ச்சியற்றதை நான் கண்டேன். அன்று நான் நினைத்தது இன்று நான் உங்கள் மனதில் உதித்திருக்கின்றது' என்றார்

"இங்கு நான் வந்தகாலம் தொடக்கம் சிறுபான்மைத் தமிழ் மக்களது பிரச்னைகளில் கூடுதலாக ஈடுபட்டிருக்கிறேன். இந்த மக்களுக்காக எம். சி கஷ்டப்படுவதையும் நான் கண்டிருக்கின்றேன்' என்றும் அவர் கூறினார்.

திரு எம். சி. சுப்பிரமணியம் நன்றி தெரிவித்துப் பேசுகையில், மனிதனுக்கு மனிதன் உதவி செய்வது மனிதப்பண்பு. எனது மனிதப் பண்பின் பிரகாரம் நான் மக்களுக்குச் சேவை செய்கின்றேன். அதற்குப் பிரதியுபகாரம் கிடைக்குமென்று நான் எதிர்பார்க்கவும் இல்லை, என்னை புகழ வேண்டுமென்று நான் கருதவுமில்லை. மக்களுக்கு எனது சேவை என்றும் இருக்கும்' என்றார்.

# 48க்கு முன் காசநோய் சிகிச்சை நிலைமை!

தாவடி, வியாழன்.

காச ரோகிகள் சாவதற்காகவே ஆஸ்பத்திரிக்குச் சென்றார்களாம். சிகிச்சை பெறச் சென்றவர்களில் 80 வீத நோயாளிகள் மருத்துவ நிலையங்களில் அனுமதிக்கப்பட்டு 6 மாதங்களுக்குள் இறந்தார்களாம். தாதிகளும் இந் நோயில் மாண்டார்களாம். நோயாளரைப் பரிசோதிப்பதற்கு அப்போது எந்த விதமான வசதிகளும் இருக்கவில்லையாம். இந்நிலை 1948க்கு முன் நிலவியது.

இவ் விபரமடங்கிய அறிக்கை யொன்றை இலங்கை தேசிய க்ஷயரோக தடுப்புச் சங்கத்தின் யாழ். கிளை வெளியிட்டுள்ளது அறிக்கை தெரிவிப்பதாவது:-

"அரசாங்கத்தின் க்ஷயரோகத் தடைச் சம்பந்தமான வேலைகளுக்கு உதவி செய்யும் முகமாக இலங்கை தேசிய க்ஷயரோக தடுப்புச் சங்கம் இலங்கை சுதந்திரம் அடைந்த வருடமாகிய 1948ம் ஆண்டு ஜூன் பதினேழாம் திகதி டாக்டர். ஜே எச். எம். ஜெயசூரியாவின் விடா முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டது. க்ஷயரோகத்தினால் பாதிக்கப்பட்டுத் தங்கள் குடும்பத்திற்காக மேலும் உழைக்க முடியாமல் சாவதற்காக மருத்துவ மனைக்குச் செல்லும் ஏழை நோயாளிகள் தங்கள் சொத்துரிமையாக விட்டுச் செல்லும் கஷ்டப்படும் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும்மற்றும் அனாதை நிலை வாழ்பவர்களுக்குமாக இந்த ஸ்தாபனம் உருவாக்கப்பட்டது.

"1948-ம் ஆண்டு இந்த ஸ்தாபனம் ஆரம்பிக்கப்படுமுன் மருத்துவ நிலையங்களில் எண்ணற்ற நோயாளர் பெருகியிருந்தார்கள். கட்டில்களுக்குக் கீழும் இடையேயும் விறாந்தைகளிலும் நோயாளர்கள் படுத்திருந்தார்கள். இதில் திடுக்கிட வைக்கும் செய்தி என்னவெனில் 80 வீத நோயாளர் மருத்துவ நிலையங்களில் அனுமதிக்கப்பட்டு 6 மாதங்களுக்குள் இறந்தார்கள். நோயாளிகள், கண்ட இடங்களில் துப்பினார்கள். தாதிகளும் இந்நோயால் இறந்தனர். அப்போது நோயாளிகளைப் பரிசோதிக்க எந்தவிதமான வசதிகளும் இருக்கவில்லை. இன்னும் பலர் நோய் முற்றியபின்னர் தமக்குச் சமுதாயத்தில் களங்கம் ஏற்பட்டுவிடுமே என்ற பயத்தினால் நோயை மறைத்தார்கள்.

இவற்றையுணர்ந்து இக்கொடிய நோயை முற்றாக ஒழிக்கும் நோக்கத்துடன் கடவத்தை புனர்வாழ்வு நிலையம், காலி மாரிபு சிகிச்சை நிலையம், வெலிசறைக் க்ஷயரோக நிலையம் போன்ற பல வைத்தியசாலைப் பிரிவுகளை இந்தச் சங்கமே அமைத்தது."

